**சிறப்பு நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**
**முன்னிலை: திரு. அ. செல்வகுமார், பி.இ., பி.எல்.,**
**சிறப்பு நீதிபதி எண்.1, ஜெயங்கொண்டம்**
2024–ஆம் வருடம் ஜூன் திங்கள் 12–ஆம் நாள் புதன்கிழமை
**ஐ.ஏ.7/2024 இன் அ.வ.எண் 3 /2020**

சரஸ்வதி ... மனுதாரர்/
3–ஆம் பிரதிவாதி

...எதிர்...

1. ராஜீவ்காந்தி
2. பழனிமுருகன்
3. சங்கீதா
4. ரஞ்சிதா
5. ராஜராஜன் ... எதிர்மனுதாரர்கள்/
வாதிகள்

இம்மனுவானது கடந்த 10.06.2024–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. ஜெய்சங்கர், V.S. ராஜவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்ம 4 னுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.முருகேசன், N.காந்திமதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் இன்று கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் இம்மனுவை வகுமுறை 7 விதி 11(d) –ன் கீழ் தாக்கல் செய்து வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்று கோருகிறார்.

2. **<u>மனுவுரை சுருக்கம்:</u>**

எதிர்மனுதாரர்கள் பாகப் பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், அவரது தந்தை ராஜமாணிக்கம் பார்வதி என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு மனுதாரரும் 1–ஆம் பிரதிவாதியுமான கோவிந்தசாமியும் மட்டுமே வாரிசு என்றும், வாதிகள் சட்டத்திற்கு உட்பட்ட வாரிசுகள் அல்ல என்றும், பூர்வீக சொத்துக்களில் அவர்களுக்கு பாகம் இல்லை என்றும், தடை செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்துக்களின் மதிப்பு குறைவாக கணக்கிடப்பட்டுள்ளதாகவும் வழக்கு தாக்கல் செய்த ஆண்டிலேயே ரூ.50,00,000–க்கு மேல் மதிப்புடையது என்றும், இறந்து போன ராஜமாணிக்கம் தவறான உள்நோக்கம் கொண்டு குறைவாக மதிப்பிட்டு வழக்கு

தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதியும் அதை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் வழக்கு நடத்தி வந்துள்ளார் என்றும், மனுதாரர் 2022 ஆம் வருடத்தில் தான் தரப்பினராக சேர்ந்தார் என்றும், இவ்வழக்கில் விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றும், நிராகரிக்கப்படவேண்டும் என்று வழக்குக்கு தெளிவான வழக்கு மூலம் இல்லை எனக் கூறி வழக்குரையை நிராகரிக்கக் கோருகிறார்.

3. **<u>2–ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதை மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக் கொண்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

அசல் வழக்கில் 1–ஆம் பிரதிவாதியின் சகோதரி தான் இந்த மனுதாரர் என்றும், 1–ஆம் மனுதாரருடன் கூட்டு சேர்ந்துக் கொண்டு ஏற்கனவே 2014 ஆம் ஆண்டிலிருந்து விசாரணைத் தொடங்கி வாதி தரப்பில் விசாரணை முடிவுற்ற நிலையில் தீர்ப்பினை காலம் கடத்த திட்டமிட்டு சட்டப்படி செல்லாத மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்குரையை நிராகரிக்க கூறும் காரணம் ஏற்புடையதல்ல என்றும், செய்துள்ள மதிப்பீடு சரியல்ல என்றும், எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் கூறுப்பட்டுள்ளது

என்றும், சொத்துக்களின் மதிப்பு சரியாக கணக்கிடப்பட்டு 18 ஆண்டுகளுக்கு முன்பு அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விசாரணை முடியும் தருவாயில் வழக்குரையை நிராகரிக்கக் கோரும் காரணம் ஏற்புடையதல்ல என்றும், சொத்துக்களின் மதிப்பு அதிகமானது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரருடையது என்றும், அதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றும், குறைவாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருந்தாலும் அதை வசூல் செய்து சட்ட நிலைப்பாடு உள்ள நிலையில் இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், இது ஒரு பாக வழக்கு என்பதால் இந்து வாரிசு உரிமை சட்டப்படி 2 முதல் 6 வாதிகள் இறந்த 1–ஆம் வாதியின் சட்டப்படியான வாரிசுகளா என்பதையும், அவர்களுக்கு பாகம் கிடைக்கக்கூடியதா என்பதும் தீர்வு காண வேண்டிய எழுவினா என்பதால் இந்த மனுவின் மூலம் 1–ஆம் பிரதிவாதி தனது சகோதரியை விட்டு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதுதல்ல என்றும், இறந்து போன ராஜமாணிக்கத்தை இம்மனுவில் சேர்க்காமல் தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றும் 1, 2

பிரதிவாதிகளையும் சேர்க்காததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கில் கூறியுள்ள வழக்கு மூலம் சரியானது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்ய கோருகின்றனர்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் ஏதும் இல்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது தான்.

6. **பிரச்சனைக்கான தீர்வு:**

மனுதாரர் இவ்வழக்கின் வாதிகள் சட்டப்படியான வாரிசுகள் அல்ல என்றும் அதனால் அவர்கள் சட்டப்படி பாகம் எதுவும் பூர்வீக சொத்துக்களில் கோர இயலாது என்று கூறி வழக்குரையை நிராகரிக்க கோருகின்றனர். இந்த வழக்கை தாக்கல் செய்தது இறந்து போன ராஜமாணிக்கம். தற்போது அவருடைய வாரிசுகளாக இந்த எதிர்மனுதாரர்கள் வாதிகளாக ஏற்கனவே சேர்க்கப்பட்டுவிட்டனர். மனுதாரர் கூறும் விதமாக எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்குட்பட்ட வாரிசுகள் இல்லை

என்றாலும் இறந்துபோன ராஜமாணிக்கத்திற்கு வரவேண்டிய பங்கில் அவர்கள் உரிமை கோர சட்டத்தில் வழி வகை உண்டு. அவர்கள் சட்டப்படியான வாரிசுகளா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணையின் போது தான் தீர்மானிக்க இயலும்.

7. வழக்கு சொத்துக்கள் மதிப்பு குறைவாக செய்துள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார். வழக்கு தாக்கல் செய்த ஆண்டில் வழக்கு சொத்துக்களின் சந்தை மதிப்பை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் இந்த வழக்கு திருத்தப்பட்ட நீதிமன்ற கட்டணச் சட்டத்தின் அடிப்படையில் அரசு வழிகாட்டி மதிப்பின் படி மதிப்பீடு செய்து கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளதால் வழக்கு சொத்துக்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவே கருதப்படுகிறது. அதனால் மதிப்பீடு குறித்து மனுதாரர் எழுப்பியுள்ள ஆட்சேபணை ஏற்பதற்கில்லை.

8. வழக்கிற்கு சரியான வழக்கு மூலம் இல்லை என்று மனுதாரர் கூறியுள்ள நிலையில் வாதி கூறியுள்ள வழக்கு மூலம் சரியானதா என்பதை நிரூபிக்க வேண்டிய சுமை

வாதிகளுடையது. அது வழக்கு விசாரணையின் போது தான் உண்மையானதா என்பதை தீர்மானிக்க இயலும். அதனால் வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்று கூறி வழக்குரையை நிராகரிக்க கோரும் இந்த மனு தற்போதைய சூழ்நிலையில் நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

9. **முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் பிழைநீக்கம் செய்து என்னால் இன்று (12.06.2024) அவையறிய பகரப்படுகிறது.

*/ஒப்பம் /* (அ.செல்வகுமார்)
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

..இல்லை..

*/ஒப்பம் /* (அ.செல்வகுமார்)
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.